**செய்தி வெளியீடு எண் : 484** **நாள்: 28.03.2022**

**அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் நடைபெற்ற 2022ஆம் ஆண்டிற்கான முதல் நிலை தேர்விற்கான பயிற்சி வகுப்பினை மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் இன்று 28.03.2022 நடைபெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான முதல் நிலை தேர்விற்கான பயிற்சி வகுப்பினை மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தொடங்கி வைத்து, முதல் நிலை மற்றும் முதன்மைத் தேர்வுக்கான புவியியல் பாடப் புத்தகத்தை வெளியிட, அரசு தலைமைச் செயலாளர் மற்றும் பயிற்சித் துறை தலைவர் முனைவர். வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். இதில் மனிதவள மேலாண்மைத் துறை அரசு செயலாளர் திருமதி மைதிலி கே. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

அகில இந்திய குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையத்தில் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் நுழைவுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 165 நபர்கள் (முழு நேரம் / பகுதி நேரம்) அகில இந்திய குடிமைப் பணிகள் முதல் நிலை தேர்வுக்கான பயிற்சியை பெற உள்ளனர். மேலும், காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கும் தற்போது சேர்க்கை நடைபெற்று வருகிறது.

முன்னதாக, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில், 75ஆவது சுதந்திர தின விழா பூங்காவை திறந்து வைத்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in